## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2024**
**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது?
2. காப்பிய இலக்கணம் பற்றி முதன் முதலில் பேசிய நூல் எது?
3. சீவக சிந்தாமணியின் மற்றொரு பெயர் என்ன?
4. பாரதம் பாடிய வில்லிபுத்தூராரைச் சந்தப்பா போட்டியில் வென்றவர் யார்?
5. ஹோமர் எழுதிய காவியங்கள் யாவை?
6. மணிமேகலை தன் பழம் பிறப்பை அறிந்து கொண்ட இடம் எது?
7. சிலம்பு உணர்த்தும் சமூக நம்பிக்கைகளில் ஒன்றைக் கூறுக.
8. சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றியதால் பெற்ற பெயர் யாது?
9. கம்பர் பற்றி வழங்கும் பழந்தொடர்கள் இரண்டினை எழுதுக.
10. அகல்யா குறுங்காப்பியத்தை எழுதியவர் யார்?
11. சமய வாதம் செய்த இரு காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
12. 'ஏனியட்' காவியக் கதை உணர்த்தும் கருத்து யாது?
13. மனித தெய்வம் காந்தி காப்பியத்தில் இடம் பெற்றுள்ள முக்கியமான இரு கிளைக் கதைகள் யாவை?
14. பூங்கொடி எந்த காப்பியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது?
15. பெருங்காப்பியப் பொது நிகழ்ச்சிக் கூறுகள் இரண்டினைச் சுட்டுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பெருங்காப்பிய வர்ணனைக் கூறுகள் எவை?
2. கண்ணகி எவ்வாறு அருட் கடவுளாக ஆகிறாள்?
3. மனித பிறவி உயர்ந்தது என்பதை வளையாபதி எவ்வாறு எடுத்துரைக்கிறது?
4. இரட்சணிய யாத்திரிகம் – குறிப்பு வரைக.
5. வில்லிபுத்தூரார் பாரதம் பாட நேர்ந்த நிகழ்வை எழுதுக.
6. அகலிகை வெண்பா வழி புலப்படும் அகலிகையின் பெண் உணர்வைச் சுட்டுக.
7. கண்ணப்ப நாயனாரின் சிறப்பு யாது?
8. சுந்தர காண்டத்தின் பெயர் பொருத்தத்தை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ்க் காப்பிய வரலாற்றில் சிலப்பதிகாரம் பெறும் இடத்தை மதிப்பிடுக.

   (அல்லது)

   (ஆ) பாரதசக்தி மகா காவியத்தின் காப்பியச் சிறப்புக்களைப் புலப்படுத்துக.

2. (அ) உலக கவிஞர்களுள் கம்பரின் கவித்தன்மையை மதிப்பிடுக.

   (அல்லது)

   (ஆ) இராவண காவியத்தில் கதைமாந்தர் தன்மையை விவரி?

3. (அ) கண்ணப்ப நாயனாரின் இறை பக்தியைப் பெரிய புராணம் வழி ஆராய்க.

   (அல்லது)

   (ஆ) அகலிகை வெண்பா, அகல்யா, வீராயி என்ற குறுங்காப்பியர்களின் வழி புலப்படும் பெண்ணீய உணர்வுகளைப் புலப்படுத்துக.

***